உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.



சிவஞான போதம்.

(உரையுடன்.)

ACC. No. 26125

7912

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவர் அருளிய

சிவஞானபோத மூலமும் உரையும்.

இது
தமிழ்ப்பண்டிதர்
கா. மு. சுந்தர முதலியாரால்
எழுதப்பெற்று

ஆரணி
திருநாவுக்கரசு சுவாமிகள் மடாலயச்
சமரச சன்மார்க்க சங்கத்தாரால்
பிரசுரிக்கப்பட்டது.

இரத்தாக்ஷி கடகரவி,

A. 26,25...

ஆரணி
திருநாவுக்கரசு அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

சிவஞான போதச்சிறப்பு.

அன்பர்காள் !

இச் சிவஞான போதம், சிவபெருமான் திருக்கரத்துட் கொண்டது நந்திதேவருக்கும் ஜனகாதிகளுக்கும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் உபதேசிக்கப்பெற்றது. சிறந்த சைவ சித்தாந்த ஞான முழுமுதல் நூலாய் விளங்குவது. விரிந்த பொருள்களையுடையது. எந்நூற்களிலும் இல்லாத மேலான விஷயங்களைத் தன்னகத்துட் கொண்டது. பன்னிரண்டு (௧௨) சூத்திரங்களையுடையது. நாற்பது (௪௰) அடிகளுடையது. இருநூற்றுப் பதினாறு (௨௧௬) சொற்களுடையது. அச்சொற்களுள் அறுநூற்று

இருபத்து நான்கு (௨௪) எழுத்துக்கள் பெற்றது. ஒவ்வொரு வீட்டிலும் பூசித்துப் போற்றப்படுவது. ஒவ்வொருவரும் படித்துச் சிந்தித்துத் தெளிந்து முடிவான அத்துவித முத்தியைப் பெறுதற்குரியது. சிவஞான சுவாமிகளால் சிற்றுரையும் பேருரையாகிய மாபாடியமும் எழுதப் பெற்றது. எவர்களாலும் மறுக்கப்படாதது. சைவல்லிப முதலிய எச்சமய நூல்களுக்கும் அரசாய் விளங்குவது.

இங்ஙனம்,

இரத்தாட்சி௵ ஆடி௴ ௧௨ } கா. மு. சுந்தரன்.

உ
கணபதி துணை.
திருச்சிற்றம்பலம்.

மங்கல வாழ்த்து.

வஞ்சித்துறை.

கல்லா னிழல் மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணை மலர்
நல்லார் புனைவரே.

பதவுரை.

கல்லால் நிழல்—(அருள் வடிவாகிய) கல்லால மரத்தின் நிழலின்கண்

மலைவு இல்லார்—(நந்தி தேவருக்கு) மலைவு தீர்த்தருளிய முதலாசிரியர்

அருளிய—கருணைகூர்ந்து அருளுதற்பொருட்டு
பொல்லார்—பொள்ளாத பிள்ளையாருடைய
இணைமலர்—ஞானசத்தி கிரியாசத்தி யென்னும் இரண்டு திருவடித் தாமரைகளை
நல்லார்—கேட்டுச் சிந்தித்துத் தெளிந்த மெய்யன்பர்கள்
புனைவரே—(இருசத்திகட்கும் வியாபகமாகக் கொண்டு) தாடலைபோல் அடங்கி நிற்பர்.

பொதுவதிகாரம்.

பிரமாணவியல்.

(க.) அவனவளது வெனுமவை மூவினைமையின்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர்.

அவன் அவள் அது—ஒருவன் ஒருத்தி ஒன்று

எனும் அவை—என்று சுட்டப்படும் பிரபஞ்சத்
தொகுதி
மூவினைமையின்—முத்தொழிலுடைமையால்
தோற்றிய—ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட
திதியே—உள்பொருளேயாம்
ஒடுங்கி—கன்மமலம் பரிபாகமாகும் பொருட்டு
ஒடுங்கி
மலத்து உளதாம்—ஆணவமலம் நீங்கும் பொரு
ட்டு மீளத் தோன்றுவதாம்
அந்தம்—சங்கார கர்த்தாவே
ஆதி—உலகத்திற்கு முதற் கடவுளாவார்
என்மனார் புலவர்—என்று சொல்லுவார் அறிஞர்.

பாசப் பிரமாணவியல்.

(௨.) அவையே தானேயா யிருவினையின்
போக்குவரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்குமன்றே.

அவையேயாய்—(சிவம்) உயிர்களேயாய்
தானேயாய்—(உயிர்களுக்கு) வேறுமாய்

அவையேதானேயாய்—(உயிர்க்கு உயிராதற்றன்
மையால்) உடனுமாய்
இருவினையின்—இருவினை காரணமாக
போக்குவரவுபுரிய—இறத்தலும் பிறத்தலும் செய்ய
ஆணையின்—தமது ஆஞ்ஞாசத்தியினின்றும்
நீக்கம் இன்றி—பிரிப்பு இல்லாமல்
அன்றே—அநாதியாகவே
நிற்கும்—நின்றருளுவர்.

பசு உண்மை.

(௩.) உளதில தென்றலின் எனதுட லென்றலின்
ஐம்புலனொடுக்க மறிதலின்கண் படில்
உண்டி வினையின்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா இயந்திர தனுவினு ளான்மா.

இலது என்றலின்—இஃதான்மா வன்று என்னும் பொருள் உண்மையால்

ஆன்மாவுளது—இதனின் வேறாய் உயிரென்ப
தொன்றுண்டு
எனது உடலென்றலின்—யான் உடம்பு என்னு
மல் என்னுடம்பு என வழங்க
லின்
ஆன்மாவுளது—இவ்வுடம்பின் வேறாய் உயிரெ
ன்ப தொன்றுண்டு
ஐம்புலன் அறிதலின்—ஐம்புலன்களை யறிதலால்
ஆன்மாவுளது—இவைகளின் வேறாய் உயிரெ
ன்ப தொன்றுண்டு
ஒடுக்கம் அறிதலின்—ஐம்பொறிகள் ஒடுங்கின
சொப்பனம் அறிதலால்
ஆன்மா வுளது—உயிர் வேறுண்டு
கண்படில்—துயிலும்போது
உண்டி—விடயங்களால்வரும் இன்பதுன்ப
நுகர்ச்சியும்
வினை—உடம்பு சேட்டித்தலும்
இன்மையின்—இல்லாமையால்
ஆன்மாவுளது—இப்பிராணவாயுவின் வேறாய்
ஆன்மாவுண்டு
உணர்த்த உணர்தலின்—கலைமுதலிய கருவிக
ளால் அறிவிக்க அறிதலால்

ஆன்மாவுளது—பிரமத்தின் வேறாய் உயிரென்ப தொன்றுண்டு
மாயா இயந்திரதனுவினுள்—மாயாகாரியங்களால் யாக்கப்பட்ட வுடம்பின் கண்ணே
ஆன்மாவுளது—அவற்றிற்கு வேறாய் ஆன்மாவுண்டு.

பசு இலக்கணம்.

(சு.) அந்தக்கரணம் அவற்றினொன் றன்றவை
சந்தித்ததான்மாச் சகசமலத்துணரா
தமைச்சரசேய்ப்ப நின்றஞ் சவத்தைத்தே.

ஆன்மா—ஆன்மாவானது
அந்தக்கரணம் அவற்றின்—அந்தக் கரணங்கள் நான்கனுள்
ஒன்று அன்று—ஒன்றன்று ஆயினும்

அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று—அமைச்சரோடு கூடிநின்று தொழில்செய்யும் அரசன்போல
சகசமலத்து உணராது—ஆணவமலத்தால் உணர்வின்றி
அவை சந்தித்தது—அவ்வந்தக் காணங்களோடு கூடிநின்று
அஞ்சு அவத்தைத்து—சாக்கிரமுதலிய ஐந்தவத்தை யுடையதாம்.

பாச இலக்கணம்.

(ரு.) விளம்பிய வுள்ளத்து மெய்வாய் கண் மூக்
களந்தறிந் தறியா வாங்கவை போலத்
தாந்தமுணர்வின் றமியருள்
காந்தங்கண்ட பசாசத்தவையே.

விளம்பிய—மேலேகூறிய
உள்ளத்து—உயிரால்

மெய்வாய் கண்மூக்கு—மெய்வாய் கண்மூக்குச் செவியென்பன
அளந்தறிந்து—(தத்தம் விடயங்களை) அளவிட்டறிந்தும்
அறியா—(தம்மையும் உயிரையும்) அறியமாட்டா.
ஆங்கவை போல—அவ்விந்திரியங்கள் போல
தாம்—உயிர்களும்
தம் உணர்வின்—தமதறிவிற்கு வியஞ்சகமாகிய
தமி—முதல்வனது
அருள்—சிற்சத்தியால் (அவத்தையி னின்று வினைப்பயன்களை நுகரும் தம்மையும் தம்மைச் செலுத்துந் திருவருளையும் அறியமாட்டா)
அவையே—உயிர்கள் (அவ்வாறுணர்தல்)
காந்தம்—காந்தத்தை
கண்ட—கண்ட
பசாசத்து—இரும்பு (அதன் சந்நிதிமாத்திரையின் இழுத்துக்கொள்ளப்படுமாறு போல்) (முதல்வன் சந்நிதிமாத்திரையினும், ஆதலான் அதுபற்றிமுதல்வன் விகாரியாதலின்று)

பதி இலக்கணம்.

(சூ.) உணருருவசத்தெனின் உணராதின்மையின்
இருதிறனல்லது சிவசத்தாமென
இரண்டு வகையினிசைக்கு மன்னுலகே.

உணர் உரு எனின்—(முதற்பொருள்) அளவைகளால் அறியப்படும் இயல்பிற்றெனின்
அசத்து—(அறியப்படும் பிரபஞ்சம் போல் அசத்தாம்
உணராது எனின்—அறியப்படாத இயல்பிற்று எனின்
இன்மை—(முயற்கோடுபோலச்) சூனியப்பொருளாம்
இன்—ஆதலின்
இருதிறனல்லது—இவ்விரு பகுதியுமன்றி
இரண்டுவகையின்—அறியப்படாமையும் படுதலுமாகிய இரண்டுவகையாலும்
சிவசத்தாமென—சிவ சத்தாமென்று

மன் உலகு—மெய்யுணர்வில் நிலைபெற்றுயர்ந்
தார்
இசைக்கும்—கூறுவர்.

சிறப்பதிகாரம்.

சாதனவியல்.

ஆன்ம சொரூபம்.

(எ.) யாவையுஞ் சூனியஞ் சத்தெதிரா
கலின்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிறனறிவுள திரண்டலா ஆன்
மா.

சத்து எதிர்—சிவசத்தின் சந்நிதியில்
யாவையும்—அசத்தெல்லாம்
சூனியமாகலின்—பாழாகலின்
சத்தே—சத்தாகிய சிவம்
அறியாது—(அசத்தாகிய வுலகை) அறியாது

அசத்து—அசத்தாகிய வுலகு
இலது (ஆதலின்)—அறிவில்லாத சடமாதலின்
அறியாது—(சத்தாகிய சிவத்தை) அறியாது.
பாரிசேட அளவையால்
இருதிறன் அறிவுளது—இரண்டுவகை அறிவுள்ளதொன்று உண்டென்று பெறப்படுதலின் அதுவே சத்தாதற்றன்மையும் அசத்தாதற்றன்மையுமாகிய
இரண்டலா—இரண்டுமன்றிச் சதசத்தாயுள்ள
ஆன்மா—உயிராம்.

(அ.) ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்
டன்னியமின்மையின் அரன்கழல் செலுமே.

தவத்தினில்—தான்முன் செய்தபுண்ணியத்தால்

தம்முதல்—தம்முள் உணர்த்திவந்த பரம்பொரு [ளே
குருவுமாய்—குருவடிவாய் வந்து சிவதீக்கைசெய்து (மன்னவ குமாரனை நீ)
ஐம்புலம்—ஐம்பொறிகளாகிய
வேடரின்—வேடருட்பட்டு
வளர்ந்து—வளர்ந்து
அயர்ந்தனையென—நின்தகைமையறியாமல் மய
உணர்த்த—அறிவிப்ப [க்கினையென்று
விட்டு—அவ் வேடரைவிட்டு நீங்கி,
அந்நியமின்மையின்—அநந்நியமாந் தன்மையின் நிலைபெற்று
அரன் கழல்—அம்முதல்வன் திருவடிகளை
செலுமே—அணையும்.

(க.) ஊனக்கண் பாச முணராப்பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
யுராத்துனைத் தேர்த்தெனப் பாச மொருவ
தண்ணிழலாம் பதிவிதியெண் ணுமஞ் செழுத்தே.

ஊனக்கண்—குறையுணர்வாகிய பசுவறிவானும்
பாசம்—பாசவறிவாலும்
உணரா—உணரப்படாத
பதியை—முதல்வனை
ஞானக்கண்ணினில்—அவனது திருவடி ஞானத்
சிந்தை—தன்னறிவின் கண்ணே [தால்
நாடி—ஆராய்ந்தறிக. (அந்த ஞானத்தால்)
பாசம்—நிலமுதல் நாதமீறாகிய பாசக் கூட்டம்
உராத்துனே—நில்லாது பரந்துதிரியும் அதி
வேகமுடைய
தேர்த்தெள—பேய்த் தேரினியல்பாய்க் கழிவ
ஒருவ—நீங்கவே [தென்றறிந்து
பதி—அப்பதி ஞானம்
தண்ணிழலாம்—(பிறவி வெப்பத்திற்கு) குளிர்ந்
த நிழலாய் வெளிப்பட்டு விளங்
கும். (கண்டகாஷி சவியாமைப்
பொருட்டு)
அஞ்செழுத்து—(அப்பொருள் பயக்கும்) ஐந்
தெழுத்து
விதி—அவ்விதிப்படியறிந்து
எண்ணும்—கணிக்கப்படும்.

பயனியல்.

(௰) அவனே தானேயாகிய வந்நெறி
ஏகனாகியிறை பணிநிற்க
மலமாயை தன்னொடு வல்வினையின்
றே.

அவனே—அம்முதல்வனே
தானேயாகிய—தானேயாய் ஒற்றுமைப்பட்டு
உயிர்வழிநின்ற
அந்நெறி—அப்பெத்தநிலைபோல்
ஏகனாகி—அவனோடு ஒற்றுமைப்பட்டு
இறைபணி—அவ்விறைவன் பணியில்
நிற்க—வழுவாது நிற்க
மலம் மாயை தன்னொடு — ஆணவமலம் மாயா
மலம் இரண்டனோடு.
வல்வினை—வலிய கன்ம மலமும்
இன்றே—இல்லையா மொழியும்.

(௧௧) காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம்
போல்

காண வுள்ளத்தைக் கண்டு காட்ட
லின், அயரா அன்பின் அரன்கழல்
செலுமே.

காணுங்கண்ணுக்கு—காட்டக்காணுந் தன்மை
யுடைய கண்.
காண—உருவத்தைக் காணும்படி [டி
காட்டி—அதனோடொருங்கியைந்து நின்று காட்
(காணும்) —அவ்வுருவத்தைக் காண்கின்ற
உளமபோல்—ஆன்மாப்போல
(காணும்)—அறிவிக்க அறியும் இயல்புடைய
உள்ளத்தை— அவ்வான்மா (விடயத்தை)
காண—அறியும்படி
காட்டி—முதல்வன் அதனோடொருங்கி யைந்து
நின்று அறிவித்து
கண்டலின்—அறிந்துவருதலால்
அயரா—மறவாது அத்துவித நிலையைக் கடைப்
பிடித்துச் செய்யும்.
அன்பின்—அன்பானே
அரன்கழல்—அம்முதல்வன் திருவடியாகிய சிவா
செலுமே—தலைப்படும். [நந்தாநுபூதியை

(கஉ) செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடுமரீஇ
மாலறநேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழு
[மே.

(அரன்கழலணைந்த ஜீவன் முத்தனுவான்.)

செம்மலர்—செங்கமல மலர்போல் (விரிந்து விள ங்கிய முதல்வனது)
நோன்தாள்—பொறுக்குந் திருவடியை
சேரல் ஒட்டா—அணையவொட்டாது (மறக்கச் செய்யும்)
அம்மலங் கழீஇ—அவ்வியல்புடைய மும்மல அழுக்கை ஞானநீராற் கழுவி
அன்பரொடுமரீஇ—மெய்ஞ்ஞானிகளோடு கல ந்து கூடி
மால் அற—மலமயக்கம் நீங்குதலால்
நேயம் மலிந்தவர்—அன்பு மிக்குடைய அவரது
வேடமும்—திருவேடத்தையும்
ஆலயந்தானும்—சிவாலயத்தையும்

அரன் என—முதல்வன் எனவே (கண்டு)
தொழும்—வழிபட்டுவாழ்வன்.

முற்றிற்று.

மெய்கண்ட தேவநாயனார் திருவடிவாழ்க.

சிவஞானமுனிவர் திருவடி வாழ்க.

திருநாவுக்கரசு பிரஸ், ஆரணி.

"சுகோதயம்."

குறைந்த சந்தா உடைய

வாரப்பத்திரிகை இஃதொன்றே.

பிரதி வியாழன் தோறும் வெளி வருவது. உண்மைக் கருத்துகள் கொண்டது. புது உணர்ச்சி தருவது. தேசச் செய்திகள் யாவும் நிறைந்தது. எவர் கையிலும் இதைக் காணலாம். எங்கணும் பரவிப் புகழ் வாய்ந்தது. குறைந்த சந்தா உள்ளது.

சந்தா விவரம்.

வருடம் 1-க்கு சந்தா

உள்நாடுகளுக்கு	ரூபா	2—8—0
அன்னிய நாடுகளுக்கு		4—0—0

விலாசம்,—மானேஜர்,

"சுகோதயம்" ஆபிஸ்,

ஆரணி, (வடஆற்காடு.)

திருநாவுக்கரசு பிரஸ், ஆரணி, N. A. DT.